பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 08 2024 7 15
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. ஜப்பான் தொழில்துறையினர் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கடந்த 8 ஆண்டுகளில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. இந்திய உணவுக் கழகத்திடம் இருந்து மாநிலங்கள் தானியங்களை நேரடியாக கொள்முதல் செய்யலாம் என்று மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்கில் பீஹாரில் 13 பேர் மீது சிபிஐ குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

5. பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பேட்மிட்டன் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - தைவானின் **Tien Chen Chou**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஜப்பான் தொழில்துறையினர் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தம்மை சந்தித்த ஜப்பான் நாடாளுமன்ற சபாநாயகர் திரு. **Nukaga Fukushiro** மற்றும் அந்நாட்டு தொழில்துறையினரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜப்பான் நாட்டிடமிருந்து அதிக அளவில் முதலீடு மற்றும் தொழில்நுட்பத்தைப் பெறும் வகையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் கூறினார்.

<<<<>>>>

கடந்த 8 ஆண்டுகளில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்கப்பட்டுள்ளதாக மத்திய பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இக்காலகட்டத்தில் 10 ஓய்வூதிய முகாம்கள் நடத்தப்பட்டதாக கூறினார்.

இதன்மூலம் சுமார் 25 ஆயிரம் ஓய்வூதியதாரர்களின் கோரிக்கைகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 17 ஆயிரத்து 760 குறைகளுக்கு தீர்வு காணப்பட்டதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்கில் பீஹாரில் 13 பேர் மீது சிபிஐ முதலாவது குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

இதற்கிடையே மற்ற குற்றவாளிகள் மற்றும் சந்தேகத்திற்கு உரியவர்களிடம் தொடர்ந்து புலனாய்வு விசாரணை மேற்கொள்ளப்படுவதாக சிபிஐ கூறியுள்ளது.

நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக இதுவரை 58 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டு 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தேர்வுக்கு முந்தைய நாள் ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் தேர்வு மையத்தில் இருந்து வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது கண்டறியப்பட்டதாகவும் சிபிஐ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மாநில ஆளுநர்களின் 2 நாள் மாநாடு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் புதுதில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று தொடங்குகிறது.

இம்மாநாட்டில் அனைத்து மாநில ஆளுநர்கள், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் ஆகியோர் பங்கேற் உள்ளனர்.

அத்துடன் வேளாண் மற்றும் விவசாயிகள் நலன், கல்வி, பழங்குடியினர் நலன், தகவல் மற்றும் ஒலிபரப்பு, சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்கள், நிதி ஆயோக்கின் தலைமைச் செயல் அதிகாரி உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

மூன்று குற்றவியல் சட்டங்களை அமல்படுத்துதல், உயர்கல்வி சீர்திருத்தங்கள் உள்ளிட்டவை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் பிரிவுகளில் உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் உண்டு என்று உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று மத்திய தகவல் ஒலிபரப்பு இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன் மூலம் தமிழகத்தில் அருந்ததியர் சமூகத்திற்கான 3 சதவீத உள்ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேபோல் ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் உள்ள 'மதிகா' சமூகத்தினரும் பயனடைவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக பிரதமருக்கு தாம் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கல்வித்துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று தமது துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பதிலளித்துப் பேசிய அவர், தரமான கல்வியின் மூலம் மட்டுமே 2047ஆம் ஆண்டுக்குள் 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை நாடு அடைய முடியும் என்பதால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் உயர்கல்விக்கான பட்ஜெட் ஒதுக்கீடு 78 சதவீதம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போது 9 லட்சத்து 19 கோடி ரூபாய் கல்வித்துறைக்காக செலவிடப்படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

பழங்குடியின மாணவர்களின் கல்விக்காக அரசு உறுதிபூண்டுள்ளது என்றும், அவர்களின் வசதிக்காக 500 விடுதிகள் கட்டப்படும் என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>

தானியங்கள் பற்றாக்குறை உள்ள மாநிலங்கள் மின்னணு ஏலத்தில் பங்கேற்காமல், திறந்தவெளி சந்தை விற்பனை திட்டத்தின்கீழ் இந்திய உணவுக் கழகத்திடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யலாம் என்று மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

அதன்படி குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 2 ஆயிரத்து 800 என்ற விலையில் மத்திய அரசின் உணவு மற்றும் பொதுவினியோகத்துறை, மாநிலங்களுக்கு நேரடியாக வழங்கும் என்று கூறியுள்ளார்.

பருப்பு வகைகளின் சாகுபடி அதிகரித்துள்ளதாகவும், விவசாயிகளிடம் இருந்து 100 சதவீதம் கொள்முதல் செய்யப்படும் என்றும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

கேரளாவில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு மற்றும் இதர பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 70 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே சூரல்மலை - முண்டக்கை இடையே ராணுவத்தினர் அமைத்த தற்காலிக பாலம் போக்குவரத்திற்காக நேற்று திறக்கப்பட்டது.

மீட்புப் பணிகளில் ஈடுபட இன்று முதல் அந்த பாலம் பயன்படுத்தப்பட உள்ளது.

இந்நிலையில் முண்டக்கை பகுதியில் கனமழை பெய்ததை அடுத்து நேற்று பிற்பகல் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

இன்று அப்பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற துப்பாக்கி சுடும் வீரர்கள் 6 பேருக்கு பாராட்டு விழா நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மண்சுக் மாண்டவியா, துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் கலப்புக் குழு பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற சரப்ஜோத் சிங்கிற்கு 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை பரிசாக வழங்கினார்.

துப்பாக்கிச் சுடுதல் வீரர்கள் அர்ஜுன் பபுதா, ரமிதா ஜிண்டால், ரிதம் சங்வான், சந்தீப் சிங், அர்ஜுன் சிங் சீமா ஆகியோரும், அவர்களது பயிற்சியாளர்கள் சுமா ஷிரூர், சமரேஷ் ஜுங், அபிஷேக் ராணா ஆகியோரும் பாராட்டப்பட்டனர்.

<<<<>>>>

ஜெய்ப்பூரில் பெய்து வரும் கனமழை காரணமாக அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு அம்மாநிலத்தில் அதிக அளவு மழைப்பொழிவு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மழையால் ஏற்பட்ட விபத்து காரணமாக ஜெய்ப்பூர் மாவட்டத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

நகரின் பல்வேறு சாலைகள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் தெஹ்ரி மற்றும் ருத்ரபிரயாக் மாவட்டங்களில் பெய்து வரும் கனமழை காரணமாக 2 நாட்களுக்கு கேதார்நாத் யாத்திரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை இயக்குநர் திரு. அபினவ்குமார் தெரிவித்துள்ளார்.

மழையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் தேசிய, மாநில பேரிடர் மீட்புக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

இதற்கிடையே அடுத்த 2 நாட்களுக்கு அங்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மழை காரணமாக உத்தராகண்ட் மாநிலத்தில் இதுவரை 11 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 8 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கேதார்நாத்தில் சிக்கித் தவிக்கும் சுமார் ஆயிரம் பேரை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

விமானப்படை மற்றும் தனியார் ஹெலிகாப்டர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக உத்தராகண்ட் மாநில அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள தெஹ்ரி மற்றும் ருத்ரபிரயாக் மாவட்டங்களில் மாநில முதலமைச்சர் திரு.. புஷ்கர் சிங் தாமி பார்வையிட்டார்.

<<<<>>>>

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பேட்மிட்டன் பிரிவின் காலிறுக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் பி.வி. சிந்து தோல்வியடைந்தார்.

இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - தைவானின் **Tien Chen Chou**-ஐ எதிர்கொள்கிறார்.

ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

ஜூடோ போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **Tulika Maan** கியூபாவின் **Idalys Ortiz**ஐ எதிர்கொள்கிறார்.

வில்வித்தை கலப்புக்குழு பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் தீரஜ் பொம்மதேவரா – அங்கிதா பகத் இணை, இந்தோனேஷிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

கோல்ஃப் போட்டியில் ககன்ஜீத் புல்லர், சுபாங்கர் ஷர்மா ஆகியோரும், படகுப் போட்டியில் நேத்ரா குமணன், விஷ்ணு சரவணன் ஆகியோரும் இன்று பங்கேற்க உள்ளனர்.

<<<<>>>>

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கொழும்புவில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 2.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்று நடைபெற உள்ள இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் திண்டுக்கல் அணி – திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

போர்ச்சுகலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - இங்கிலாந்தின் **Joshu Paris** இணையும், இந்தியாவின் அர்ஜுன் கதே – பிரான்சின் **Arthur Reymond** இணையும் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளன.

<<<<The End>>>>